**செய்தி வெளியீடு எண்: 77** **நாள்: 25.01.2012**

# வணிகவரித்துறை

வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு சி.வி.சண்முகம் அவர்கள் 25.01.2012 அன்று திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., செயலர், வணிக வரிகள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை மற்றும் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., முதன்மை செயலர் / வணிக வரி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் வணிகவரித்துறை அலுவலர்களின் பணித்திறனை சென்னையில் ஆய்வு செய்தார்கள். தமிழ் நாட்டின் அனைத்து கோட்ட மற்றும் செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

2011–2012 நிதியாண்டின் முதல் 9 மாதங்களில் ரூபாய் 28299.56 கோடி வரியாக வசூலிக்கப்பட்டது எனவும் இவ்வரி வசூலானது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் வசூலான ரூபாய் 22889.02 தொகையுடன் ஒப்பிடும்போது 23.64% வளர்ச்சி விகிதத்தை அடைந்துள்ளது. அரசானது 2011–12 ஆம் நிதி ஆண்டிற்கு வருவாய் வசூல் இலக்காக ரூபாய் 41,200 கோடியை நிர்ணயித்துள்ளது. மேலும் மாநிலத்தின் சொந்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு வணிகவரித்துறையின் மூலம் பெறப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அடுத்தபடியாக அலுவலர்களின் பணியான மாதாந்திர வரி வசூல், மாதாந்திர நமுனாக்களை பெறுதல், செயலாக்க கடைத்தணிக்கை அறிக்கைகள் மற்றும் மதிப்புக்கூட்டு வரி தணிக்கை அறிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், பின்தங்கிய வரி விதிப்பு இனங்களை இறுதி வரி விதிப்பு செய்தல், நிலுவை வரி வசூல், வணிகர்களின் பதிவுச் சான்றிதழ்களின் நிலை, தெருத்தணிக்கைகளில் முன்னேற்றம் மற்றும் சமாதன திட்டம் ஆகிய இனங்களில் திறனாய்வு செய்து, அரசானது பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வணிகவரித்துறை மூலம் வசூல் செய்யப்படும் வரிகளைக் கொண்டு செயல்படுத்தப்படுவதால் வரி நிர்வாகத்தை முடுக்கி அலுவலர்கள் திறம்பட வரி வசூல் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்கள்.

இத்துறையில் தகவல் தொழில் நுட்பத்தை பெருமளவு உபயோகிக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். அதன் பொருட்டு அரசானது வணிகவரித் துறையில் கணினி, மென் மற்றும் வன் பொருட்களை மேம்படுத்தி முழுமையான தானியங்கு செயல்பாடுடைய கணினி மயமாக்களுக்கு ரூ.230.96 கோடி, ஒதுக்கி ஆணையிட்டுள்ளது. இதனை கண்காணிப்பதற்கும் சீரிய முறையில் செயல்படுத்துவதற்கும் தமிழக அரசின் தலைமைச் செயலர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

செயலாக்கப் பிரிவினை வலிமையாக்க பலவித முன்முயற்சிகளை எடுத்து வரி ஏய்ப்பினை தடுத்து சிறப்பான வரி வசூலுக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அவற்றுள் பெத்திக்குப்பத்தில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைப்பதற்கான கருத்துரு, செயலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு கையடக்க முனையம் வழங்கியது மற்றும் சோதனை சாவடிகளின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்தியது போன்றவை பெரிய அளவிலான முயற்சிகளாகும்.

துறையின் திறமையான செயல்பாட்டிற்கும் சிறப்பான நடவடிக்கைகளுக்கும் வரி செலுத்துவோருக்கு வசதி செய்யவும் அரசு அனைத்து வசதிகளையும் செய்துதரும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**